அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை : 15/2024

எனது இலக்கம் : EST-6/03/LEA/3237(1)

பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2024.09.06

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

## அனுமதிக்கப்பட்ட வெளிநாட்டு விடுமுறை கால அளவினைத் தாண்டி முறையான அனுமதியின்றி வெளிநாட்டில் இருக்கும் அரசாங்க உத்தியோகத்தர்கள் தொடர்பில் செயலாற்றுதல்

அரசாங்க உத்தியோகத்தர்கள் தாபனக் கோவையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் அல்லது 2022.06.22 தினத்தன்றான பொது நிர்வாக சுற்றறிக்கை 14/2022 மற்றும் அதனுடன் இணைந்த வகையிலான சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் அல்லது அதன் கீழ் வெளிநாடுகளுக்கு செல்கின்றனர். இவ்வாறு வெளிநாடுகளுக்கு செல்லும் உத்தியோகத்தர்கள் வெளிநாட்டிற்கான அனுமதி பெற்ற விடுமுறைக்கான கால அளவு முடிவில் நியமித்தப்படி சேவைக்கு அறிக்கையிடாமல், அனுமதிக்கப்பட்ட விடுமுறை காலத்தை தாண்டி மீண்டும் நாட்டிற்கு வந்து, சேவைக்கு அறிக்கையிடல் போக்கு அதிகமாக உள்ளது. தலைவர்களினால் நியமித்தபடி தமது சேவையின் கடமைகளை நிறைவேற்றாமையும் பாதிப்படைந்துள்ளதாக இவ் அமைச்சிற்கு அறிக்கையிடப்பட்டுள்ள விடயங்களின்படி அவதானிக்கப்பட்டுள்ளது.

02. முறையான வெளிநாட்டு விடுமுறைக்கான அனுமதியின்றி சேவைக்கு அறிக்கையிடாமல் இருக்கும் உத்தியோகத்தர்கள் தொடர்பில் செயற்பட வேண்டிய முறை தொடர்பில் தற்போது காணப்படும் கீழ்வரும் ஏற்பாடுகள் தொடர்பில் உங்களின் அவதானத்தை செலுத்துகின்றேன்.

i. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடபடிமுறைசார் கோவையின் XV அத்தியாயம்
ii. தாபனக் கோவையின் முதலாம் தொகுதியின் V வது அத்தியாயத்தின் 7 பிரிவு
iii. தாபனக் கோவையின் இரண்டாம் தொகுதியின் XLVIII வது அத்தியாயத்தின் 37 ஆம் பிரிவு

03. முறையான அனுமதியின்றி சேவைக்கு அறிக்கையிடாமல் இருக்கும் உத்தியோகத்தர்கள் தொடர்பில் மேற்கூறப்பட்ட ஏற்பாடுகளின்படி காலம் தாழ்த்தாது செயலாற்றாமையினால், உரிய தாபனத்திற்குள் பல்வேறுபட்ட நிர்வாக பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளதுடன், அது செயற்திறன் மற்றும் வினைத்திறனான அரசாங்க சேவையொன்றினை பொதுமக்களுக்கு பெற்றுக் கொடுப்பதில் நேரடியான பாதிப்பொன்றினை ஏற்படுத்தும். இத்தகைய சந்தர்ப்பங்களைத் தடுப்பதற்காக மேற்குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளைப் போன்று கீழே குறிப்பிடப்படும் நிலைமைகள் தொடர்பில் அவதானத்தை செலுத்தி, மேலே 02 ஆம் பந்தியில் குறிப்பிட்டுள்ள ஏற்பாடுகளின்படி காலம் தாமதியாது செயலாற்ற வேண்டும்.

I) ஏதேனும் நியமித்த காலத்திற்கு அனுமதிக்கப்பட்ட வெளிநாட்டு விடுமுறையை நீடித்துக் கொள்வதற்கான கோரிக்கையொன்று செய்ய வேண்டுமெனில், அதற்கான அனுமதியினை வழங்குவதற்கு போதுமான கால அவகாசத்தினை கொடுத்து, அதற்காக விண்ணப்பிக்க வேண்டியதுடன் நீடிப்பதற்கான அனுமதி முதல் வெளிநாட்டு விடுமுறை காலம் முடிவடைய முன்னர் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

II) அத்தகைய முறையான வெளிநாட்டு விடுமுறை நீட்டிப்பின்றி அனுமதிக்கப்பட்ட நியமித்த கால முடிவில் நியமித்த தினத்திற்கு சேவைக்கு அறிக்கையிடாத உத்தியோகத்தர்களுக்காக உரிய அதிகாரிகளின் ஊடாக பதவியை விட்டுச் செல்லல் அறிவித்தல் வெளியிடப்படாதிருப்பினும், பதவியை விட்டுச் சென்ற உத்தியோகத்தர்களாக கவனத்தில் எடுக்கப்படல் வேண்டும். அவர்களிடம் பதவியை விட்டுச் செல்லல் தொடர்பான அறிவித்தல் விரைவாக வெளியிடப்படல் வேண்டும் என்பதுடன் மீண்டும் சேவைக்கு அறிக்கையிடுவதற்கு இடமளிக்கப்படல் கூடாது.

III) வெளிநாட்டிலிருந்து விடுமுறையை நீடித்துக் கொள்வதற்காக கோரிக்கை விடுக்கும் உத்தியோகத்தருக்கு அதற்கு அனுமதியை வழங்குவது தொடர்பில் ஏதேனும் பிரச்சினை இருப்பின் மற்றும் அவ் பிரச்சினை முதலாம் வெளிநாட்டு விடுமுறை காலம் முடிவடைவதற்கு முன்னர் தீர்ப்பதற்கு இயலாமை என அவதானிக்கப்படுமேயானால், உரிய உத்தியோகத்தர்களுக்கு உடனடியாக மீண்டும் சேவைக்கு அறிக்கையிடல் வேண்டும் என அறிவிக்க வேண்டும். மீண்டும் சேவைக்கு அறிக்கையிடல் வேண்டும் என அறிவிக்க வேண்டும்.

IV) விடுமுறை நீடித்துக் கொள்ள கோரி இருப்பினும், முதலாம் வெளிநாட்டு விடுமுறை காலம் முடிவடைவதற்கு முன்னர் விடுமுறை நீடித்துக் கொள்வதற்கான அனுமதி வழங்கப்படவில்லையெனில், உரிய உத்தியோகத்தர் சேவைக்கு அறிக்கையிட வேண்டும் என்பதுடன் அவ்வாறு சேவைக்கு அறிக்கையிடாத உத்தியோத்தர்கள் தொடர்பில் மேற்கூறப்பட்ட II ஏற்பாடுகளின்படி செயலாற்ற வேண்டும்.

04. அத்தோடு, முறையாக வெளிநாட்டு விடுமுறைக்கான அனுமதி வழங்கப்பட்டுள்ள காலப்பகுதிக்கு அப்பால் வெளிநாட்டில் இருக்கும் உத்தியோகத்தர்கள் தொடர்பில் அரசாங்க சேவை ஆணைக்குழுவினது நடபடிமுறைக் நடபடிக்கோவையின் XV வது அத்தியாயத்தின் ஏற்பாடுகளின்படி செயலாற்றுவதற்கான பொறுப்பு ஏதேனும் அதிகாரியினால் கடமையில் இருந்து தவறிய சந்தர்ப்பத்தில் தாபனக் கோவையின் XLVIII அத்தியாயத்தின் 1:2 பிரிவின் ஏற்பாடுகளின்படி, அவ் அதிகாரி தொடர்பில் ஒழுக்காற்று ரீதியாக செயலாற்ற வேண்டும்.

05. இவ் சுற்றறிக்கை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அனுமதியின் பெயரில் வெளிளியிடப்பட்டுள்ளது.

ஒப்பம்./ பிரதீப் யசரத்ன
செயலாளர்
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

தொலைபேசி இலக்கம் : 011-2699399
தொலைநகல் இலக்கம் : 011-2692158
மின்னஞ்சல் முகவரி : ade-vi@pubad.gov.lk